©
தமிழ்நாடு அரசு
2022

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 0.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 6] சென்னை, புதன்கிழமை, பிப்ரவரி 9, 2022
தை 27, பிலவ, திருவள்ளுவர் ஆண்டு–2053

## பகுதி IV—பிரிவு 2 இன் இணைப்பு

**2021 நவம்பர் 27 ஆம் நாளன்று ஆளுநரால் பிறப்பிக்கப்பட்ட பின்வரும் அவசரச் சட்டமானது இதன் மூலம் பொதுத்தகவலுக்காக வெளியிடப்படுகிறது:-**

**தமிழ்நாடு அவசரச் சட்ட எண். 6/2021.**

***1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தை மேலும் திருத்தம் செய்வதற்கானதோர் அவசரச் சட்டம்.***

தமிழ்நாடு சட்டமன்றமானது, அமர்வில் இல்லாதிருப்பதால் மற்றும் தமிழ்நாடு ஆளுநர் இதில் இதன்பின்பு காணப்படுகின்ற நோக்கங்களுக்காக உடனடியாக நடவடிக்கை எடுப்பது அவருக்கு அவசியமாக்குவதாக தற்போதுள்ள சூழ்நிலைகள் இருப்பதாக மனநிறைவடைந்திருப்பதால்;

தற்போது அரசமைப்பின் 213 ஆம் உறுப்பின் (1) ஆம் கூறில் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி ஆளுநர் இதன் மூலம் பின்வரும் அவசரச் சட்டத்தை பிறப்பிக்கிறார்:—

குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்.

1. (1) இந்த அவசரச் சட்டம், 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்த அவசரச் சட்டம் என வழங்கப்பெறும்.

(2) இது, உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

தமிழ்நாடு சட்டம் 27/1989.

33—ஆம் பிரிவிற்கான திருத்தம்.

2. 1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைபொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் 33—ஆம் பிரிவில், (1)—ஆம் உட்பிரிவில் உள்ள வரம்புரையில் ''பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்'' எனும் சொற்றொடருக்காக, ''பதினொரு ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள்" எனும் சொற்றொடரானது மாற்றாக அமைக்கப்படுதல் வேண்டும்.

**விளக்கவுரை.**

1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளைப் பொருளைச் சந்தைப்படுத்துதல் (முறைப்படுத்துதல்) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 27/ 1989) 33–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவானது, ஒரு புதிய சந்தைக்குழு அமைக்கப்படுவது நிலுவையில் இருக்கும்போது, சந்தைக்குழு எதனின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு மொத்தத்தில் மூன்று ஆண்டுகளுக்கு மேற்படாத ஒரு கால அளவிற்கு தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்ய அரசுக்கு அதிகாரம் அளிக்கிறது. கூறப்பட்ட வகைமுறையின் விளைவாக, மாநிலத்தில் சந்தைக் குழுக்களின் அலுவல்களை மேலாண்மை செய்வதற்கு பணியமர்த்தப்பட்ட தனி அலுவலர்களின் பதவிக்காலமானவை, அவ்வப்போது, கூறப்பட்ட இந்தச் சட்டத்தின் 33–ஆம் பிரிவின் (1)–ஆம் உட்பிரிவின் வகைமுறையை திருத்தம் செய்வதன் மூலம் கூறப்பட்ட மூன்று ஆண்டுகள் காலத்திற்கு அப்பால் நீட்டிக்கப்பட்டது. இறுதியாக, தமிழ்நாடு சட்டம் 31/2021ன் மூலம் அவர்களுடைய பதவிக் காலமானது பத்து ஆண்டுகள் மற்றும் ஆறு மாதங்கள் வரை நீட்டிக்கப்பட்டது. கூறப்பட்ட காலமானது 2021 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29 ஆம் தேதியன்று நிறைவடைய உள்ளது.

2. 26 சந்தைக்குழுக்களில், திருச்சிராப்பள்ளி மற்றும் கடலூர் சந்தைக் குழுக்களைத் தவிர 24 சந்தைக் குழுக்களுக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டனர் கூறப்பட்ட 24 சந்தைக்குழுக்களில், (தேனி சந்தைக் குழு நீங்கலாக) 23 சந்தைக்குழுக்களுக்கு தலைவர் மற்றும் துணைத்தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர் மற்றும் கூறப்பட்ட 23 சந்தைக் குழுக்களில் அவர்கள் பொறுப்பேற்றுக்கொண்டனர்.

3. எனவே, (திருச்சிராப்பள்ளி, கடலூர், தேனி சந்தைக்குழுக்கள் நீங்கலாக) 23 சந்தைக் குழுக்களின் சிறப்பு அலுவலர்களின் பதவிக்காலமானது 30–11–2020–லிருந்து, தொடர்புடைய சந்தைக்குழுக்களின் பொறுப்பினை உறுப்பினர்களால் ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு முந்தைய தேதி வரை நீட்டிக்கப்பட்டது. மேலும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக் குழுக்களின் சிறப்பு அலுவலர்களின் பதவிக்காலமானது 30–11–2020–லிருந்து 29–11–2021 வரையில் நீட்டிக்கப்பட்டது.

4. இதற்கிடையே, 2021–ஆம் ஆண்டு ஜுலை திங்கள் 23–ஆம் நாளன்று கூறப்பட்ட 24 சந்தைக்குழுக்களுக்கு நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரும்பப் பெறப்பட்டனர் மற்றும் திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி சந்தைக்குழுக்கள் நீங்கலாக 23 சந்தைக்குழுக்களுக்கு, சிறப்பு அலுவலர்கள் ஓர் ஆண்டுக் கால அளவிற்கு பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

5. திருச்சிராப்பள்ளி, கடலூர் மற்றும் தேனி ஆகிய சந்தைக்குழுக்களின் சிறப்பு அலுவலர்களின் நீட்டிக்கப்பட்ட பதவிக்காலமானது 29–11–2021 அன்றுடன் நிறைவடைய உள்ளது மற்றும் கூறப்பட்ட சந்தைக்குழுக்களுக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு மேலும் சிறிது காலம் ஆகும் என்பதாலும், கூறப்பட்ட 3 சந்தைக்குழுக்களின் சிறப்பு அலுவலர்களின் பதவிக்காலத்தை 29–11–2021–க்கு அப்பால் மேலும், ஓர் ஆண்டுக்காலத்திற்கு அல்லது கூறப்பட்ட சந்தைக்குழுக்களின் மறு அமைத்துருவாக்கம் செய்கின்ற வரையில் இவற்றில் எது முந்தையதோ அதுவரையில் நீட்டிக்க வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்சொன்ன நோக்கத்திற்காக கூறப்பட்ட தமிழ்நாடு சட்டம் 27/1989–ஐ தக்கவாறு திருத்தம் செய்வதென அரசானது முடிவு செய்தது.

6. இந்த அவசரச் சட்டம் மேற்சொன்ன முடிவிற்கு செயல் வடிவம் கொடுக்க விழைகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**ச. கோபி ரவிகுமார்,**
*அரசு செயலாளர் (சட்டமியற்றல்),*
*சட்டத் துறை.*

(தமிழாக்கம்)

**வெ. அரசகுமார்,**
*உதவி இயக்குநர்,*
*சட்ட (தமிழ்ப்பிரிவு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை ஆணையரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.